நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.747/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரேஷ்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனிசாமி |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 59 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 10–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–

1. நான் தற்போது மேட்டுர் ஏழரை ஏக்கர் குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். விபத்தின் போது தெர்மலில் பொறியாளராக பணிபுரிந்து வந்தேன். தற்போது விருப்ப ஓய்வு கொடுத்துவிட்டேன். 19.12.2024–ம் தேதி காலை 6.55 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக என்னுடைய Activa இருசக்கர வாகனத்தில் நான்கு

ரோட்டில் இருந்து தெர்மல் நோக்கி இடது பக்க ஓரமாக சென்று கொண்டிருந்தேன். எனக்கு எதிரே தெர்மல் பக்கமிருந்து ஈச்சர் வண்டியை ஓட்டி வந்தவர் என் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். மோதும் போது ஈச்சர் வாகனத்தின் பின்பக்க கதவு அருகில் இருந்த பம்பர் எனது தலையில் பட்டு விழுந்துவிட்டேன். என் வண்டியின் மீது நேரடியாக ஈச்சர் வாகனம் மோதவில்லை.

2. விபத்தில் எனக்கு நெற்றியிலும், வலது கையிலும் காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலம் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றனர். அதன் பிறகு சேலத்தில் உள்ள லண்டன் ஆர்த்தோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். என் மீது மோதிய ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநரை என்னால் அடையாளம் சொல்ல முடியாது, அடிபட்ட உடன் மயக்க நிலைக்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு போலீசார் நான் மயக்கநிலையில் இருந்ததால் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

3. எந்த வண்டி மோதியது என்ற விவரம் தெரியுமா என்றால் ஈச்சர் வண்டி ெஹவிபாடி பம்பர் இருந்தது, அந்த வண்டிதான் என் மீது மோதியது. அந்த வாகனம் எனக்கு எதிர் திசையில் வந்தது. நான் வேலைக்கு வேகமாக சென்ற போது எனக்கு முன்பாக லாரி சென்றதா என்றால் நான் வேகமாக போகமாட்டேன். எனக்கு முன்பாக லாரி சென்றதா என்றால் சென்றது. எனக்கும் லாரிக்கும் 15 அடி இடைவெளி இருந்தது. எனக்கு வேலைக்கு செல்ல நேரம் ஆகிவிட்டதால் அந்த லாரியை முந்திசெல்ல முயன்றேன் என்றால் சரியல்ல. நான் சரியான நேரத்தில்தான் போனேன், எனக்கு நேரம் இருந்தது. நான் உண்மையில் எனக்கு முன்பாக சென்ற லாரியை முந்தி செல்ல முயன்றேன் என்றாலும், முந்தி செல்ல முயன்றபோதுதான் நானாக விழுந்துவிட்டேன் என்றாலும், எதிரி ஓட்டி சென்ற வாகனம் என்மீது மோத வில்லை என்றாலும் சரியல்ல.

4. எனக்கு வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் உள்ளது, சம்பவ சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை. விபத்து மேட்டூர் நால்ரோட்டில் இருந்து முதலில் உள்ள எம்.ஜி.ஆர். பாலத்தை சுமார் 80 சதவீதம் நான் கடந்திருக்கும் போது இந்த விபத்து நடைபெற்றது. சாலையோரம் உள்ள நடைபாதையை விட்டு சற்று தள்ளி நான் சென்றுகொண்டிருந்தேன்.

5. எனக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த லாரி பாலத்தை கடந்த பிறகு எதிரில் வந்த ஈச்சர் லாரி என் மீது மோதிவிட்டது. எனக்கு இடதுப்பக்கம் இருந்த நடைபாதையில் இருந்து அரை அடி தள்ளி நான் சென்றுக்கொண்டிருந்தேன். ஓரிரு வினாடிகளில் விபத்து நடந்துவிட்டது. இரண்டு வாகனங்கள் செல்லக்கூடிய சாலையில் எதிரில் வந்த லாரி இடதுபுற ஓரமாக சென்றுக்கொண்டிருந்த என்மீது எவ்வாறு மோதியது என்று எனக்கு தெரியவில்லை.

6. அந்த சாலையில் ஒரே சமயத்தில் 4 நான்குச்சக்கர வாகனங்கள் ஒன்றாக செல்லமுடியும் என்றால் சரிதான். நான் இடதுப்புற ஓரமாக சென்றுக்கொண்டிருந்த சூழ்நிலையில் எதிர் திசையில் வந்த லாரி என்மீது வந்த மோதியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனக்கு தெர்மலில் காலை 07.00 மணியிலிருந்து 01.00 மணிவரை உள்ள சிப்ட் என்றால் சரிதான்.

7. முதல் சிப்ட்டுக்கு நேரமாகிவிட்டதால் எனது வாகனத்தில் வேகமாக சென்று பிரேக் சரியாக பிடிக்காமல் ஸ்கிட்டாகி கீழே விழுந்து நானாக விபத்து ஏற்படுத்திக்கொண்டு காயத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றாலும் எதிரி ஓட்டிவந்த வாகனம் என்மீது மோதவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் எதிரி எனக்கு முதலுதவி செய்து மருத்துவமனைக்கு அழைத்து செல்ல 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி காவல் நிலையத்திலும் தகவல் சொன்னார் என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. நான் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்காக மேற்படி எதிரி ஓட்டி வந்த லாரி விபத்து ஏற்படுத்தியதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. அந்த நேரம் இரவு சிப்ட் முடிந்து என்னுடன் வேலை செய்யும் நபர்கள் வெளியே வரும் நேரம் என்பதாலும் உடனடியாக எனக்கு உதவிக்காக அவர்கள் வந்துவிட்டார்கள். விபத்து நடந்தவுடன் மயக்க நிலைக்கு சென்றுவிட்டதாக சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு காதுகள் கேட்டுக்கொண்டுதான் இருந்தது. கண்களைத்தான் திறக்க முடியவில்லை.

9. நான் சொன்னவாறு சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு வழக்கிற்காக வேண்டி எனக்கு முதலுதவி செய்த எதிரி மீது பொய்யான புகாரினை அளித்து பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.15 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**